**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.82** **நாள் : 11.07.2017**

**மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் முன்னிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் வள வகுப்பறை (Smart Class) ஏற்படுத்துவதற்காக, சாம்சங் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.**

மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் வள வகுப்பறைகள் **(Smart Class)** ஏற்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களும், சாம்சங் நிறுவனம் சார்பில் அதன் முதுநிலை துணைத் தலைவர் திரு.சாங்ஜாய்லீ அவர்களும் இன்று (11.07.2017) தலைமைச் செயலகத்தில் கையெழுத்திட்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 32 மேல்நிலைப்பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள், 92 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 119 தொடக்கப் பள்ளிகள் என மொத்தம் 281 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 200 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. மொத்தம் 84,965 மாணவ/மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

12–ம் வகுப்பு பொதுத்தேர்வில் 6,423 மாணவர்கள் தேர்வு எழுதி, அதில் 5,700 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவிகிதம் 88.7 ஆகும். அதேபோல் 10–ம் வகுப்பு பொதுத்தேர்வில் 6,302 மாணவர்கள் தேர்வு எழுதி, அதில் 5,865 மாணவர்கள் தேர்ச்சி அடைந்துள்ளனர். தேர்ச்சி சதவிகிதம் 93.1 ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, தரமான கல்வியை பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான சூழ்நிலையில் வழங்குவதற்காக, பல்வேறு வகையான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாணவ/மாணவியரின் உலகப் பொது அறிவு மேம்படவும், அன்றாட நிகழ்வுகள் பற்றிய அறிவு பெறவும், ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழி நாளேடுகள் அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளிலும் காலையில் வழங்கப்படுகின்றன.

கேட்பதை விட கண்ணால் காணும் போது கருத்து மனதில் நீடித்து நிலைக்கும் என்பதனால், பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் கல்விக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 70 உயர்/மேல்நிலைப்பள்ளி மற்றும் 14 நடுநிலைப்பள்ளிகளில் வளவகுப்பறை **(Smart Class)** பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளது.

திரையின் மூலம் தொழில்நுட்பம் வழியாக பாடங்களை கற்பிக்கப்படும்போது, அது மாணவர்களை ஈர்க்க முடியும் என்ற நல்ல நோக்கத்தில் Samsung என்ற நிறுவனத்தின் மூலம் முதற்கட்டமாக 20 மேல்நிலை மற்றும் 8 நடுநிலைப்பள்ளிகளில் வளவகுப்பறை (Smart Class) செய்து தர புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு வகுப்பறையில் 1 LFD Smart Screen, 40 கணிப்பலகைகள், Printer, Server / UPS மற்றும் 1 முதல் 12–ம் வகுப்பு வரை உள்ள பாடத்திட்டத்திற்கான மென்பொருள் வசதிகள் ஏற்படுத்தப்படும். இந்த வள வகுப்பறை பாடத்திட்டத்தின் மூலம் 29,596 மாணவ/மாணவியர்கள் பயன்பெறுவார்கள். இத்திட்டத்திற்கு ரூ.8 கோடி செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. மேலும், இத்திட்டத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளின் தரம் மேலும் உயர வழிவகை ஏற்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (கல்வி) (பொ) திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், சாம்சங் நிறுவன துணைத் தலைவர் திரு.தீபக் பரத்வாஜ், முன்னாள் கிரிக்கெட் வீரர் திரு.கே. ஸ்ரீகாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**